ஆயிரம் நிலவுகள் அல்ல
எம் அன்னை மண்தானே அழகு
அதன் வடிவினை என்னென்றுசொல்ல
எம் தாயகம் தானே அழகு 2

பொத்துவில் தொடக்கும் பொலிகண்டி வரை போய்
வரவேண்டும் எது வண்டி
பூத்திருக்கிந்த மண் எளில் கொஞ்சி
சுற்றி பார்த்து நாம் வருவோம் வா தம்பி
விதியினை நோக்கியே பயணி
இது விதியினை மாற்றிடும் பரணி 2

ஆயிரம் நிலவுகள் அல்ல

அலைகள் தாவிடும் மன்னாரு
நம் அழகிய மாந்தரும் அதனுரு
மீன் மலிந்த ஊரு மன்னாரு
குடைகள் விரிக்கும் மரக்காடு
பலம் குன்றா முல்லை வள நாடு
அதன் கூடவே இருக்கு மணலாறு

ஆயிரம் நிலவுகள் அல்ல

முட்டி தேனும் கரும்போடு
அட மட்டக்களப்பும் எம்மோடு
அம் பாறையும் எங்கள் அயலூாறு
தலைநகர் எந்த திரு உடலே
உள்ள திருமலை நல்ல துறைமுகமே
திரு கோணேஸ் வரமும் எம் வசமே

ஆயிரம் நிலவுகள் அல்ல

கலையறிவாற்றல் எளில் உடனே
அமைந்த கவினுாறு பூத்த யாழ்ப்பாணம்
தலைவன் ஊருக்கு சூட்டுவோம் மணியாரம்
உழுதுண்டு வாழ்வோர் ஊரன்றோ
நெற் களஞ்சியமான கிளிநொச்சி
அதன் அழகினை பாடடி தங்கச்சி

ஆயிரம் நிலவுகள் அல்ல

வவுனியா நிலமே வளமாமே
பல குழங்களால் நிறைந்த ஊராமே
அதை எவனோ ஆழுதல் முறையாமோ 2

ஆயிரம் நிலவுகள் அல்ல